**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி**

**2023 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 16–ஆம், நாள் சனிக்கிழமை**

CNR No.TNTI12-000096-2018

இடைநிலை மனு எண்.8/2023

இன்

அசல் வழக்கு எண்.89/2018

1.ஆர்.கே.ராமசாமி (இறப்பு)

2.ராஜம்மாள்

3.ஆர்.பாலசுந்தரி என்கிற ஆர்.சுந்தரி

4.கே.வசந்தி

5.பி.மணியரசி

6.ஆர்.கிருஷ்ணமூர்த்தி

7.கஸ்தூரி பாய் என்கிற கஸ்தூரி

8.ஆர்.தர்மராஜ்

9.ஆர்.செல்வராஜ்

... மனுதாரர்கள்/வாதிகள்

**.. எதிர் ..**

1.எஸ்.கோபால்

2.எஸ்.முருகேசன்

3.பி.கிருஷ்ணமூர்த்தி

4.என்.தெய்வசிகாமணி

5.வி.பாலசுப்பிரமணியம்

6.சார் பதிவாளர், அவிநாசி

7.சாரதா தேவி

8.கே.ஜெயலட்சுமி

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 09.06.2023 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.இ.பி.இளவரசு அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.டி.சுந்தர்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 5 முதல் 8 வரையிலான எதிர்மனுதாரர்களை அழைத்து ஆஜராகாததால் அவர்களை தோன்றா தரப்பினர்களாக உத்தரவிடப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>உத்தரவு</u>

6 ம் பிரதிவாதி 15.07.1996 ம் தேதியிட்ட கிரைய ஆவண எண்.3085/1996–ஐ (Book No.1 Volume 1288 page Nos.23 to 27) தடய அறிவியல் துறைக்கு அனுப்பி 5 ம் மனுதாரர் தந்தையின் கைவிரல் ரேகையை ஒப்பீடு செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறை விதிகள் பிரிவு 75 மற்றும் உடன்இணைந்த 151–ன்படி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u>:–**

2.1.) பிரமாண மனுதாரர் 5 ம் வாதி என்றும், மனுதாரரின் காலம் சென்ற தந்தையார் இந்த அசல் வழக்கினை தொடர்ந்ததாகவும், வாதியின் தந்தை ஆர்.கே.ராமசாமி மற்றும் 1 ம் பிரதிவாதி இணைந்து 2 ம் பிரதிவாதி பெயரில் கிரைய

ஆவணம் கடந்த 15.07.1996–ல் எழுதி கொடுத்த ஆவணம் செல்லாது என்றும், 7ம் பிரதிவாதியின் கணவர் தான் 1ம் பிரதிவாதி என்றும், அவர் வாதியின் சகோதரி என்றும், 5ம் பிரதிவாதியிடமிருந்து நிதி உதவி பெற 1ம் பிரதிவாதி இருந்ததாகவும், 5ம் பிரதிவாதியும் 1ம் பிரதிவாதியும் இணைந்து வாதியின் தந்தையின் கையொப்பங்களை பல்வேறு வெற்று தாள்களிலும் முத்திரை தாள்களிலும் பெற்றுள்ளதாகவும், பிறகு தான் மேற்படி முத்திரைதாள்களை கொண்டு 1, 2 பிரதிவாதிகள் வஞ்சககூட்டாக இணைந்து மோசடியாக 2ம் பிரதிவாதி பெயரில் வாதியின் தந்தை சொத்தினை விற்பனை செய்தது போல மோசடி கிரைய ஆவணத்தை உருவாக்கி உள்ளதாகவும், அந்த ஆவணம் 6ம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2.2.) அந்த பதிவு தேதியான 15.07.1996–ல் வாதியின் தந்தை பதிவு அலுவலகத்திற்கு செல்லவே இல்லை என்றும், அந்த பதிவு நடவடிக்கையில் வாதியின் தந்தை பங்கு பெறவில்லை என்றும், அந்த ஆவணத்தில் வாதியின் தந்தை கைரேகை எதுவும் வைக்கவில்லை என்றும், வாதியின் தந்தையின் ஒப்புக்கொள்ளப்பட்ட கைரேகையுடன் மேற்படி கிரைய ஆவணம் எண்.3085/1996–ல் உள்ள கைரேகையை ஒப்பீடு செய்து பார்த்தால் தான் அந்த கைரேகை வாதியின் தந்தையின் கைரேகை அல்ல என்று தெரியவரும் என்றும், அதற்காக 6ம் பிரதிவாதி அலுவலகத்தில் உள்ள ஆவண எண்.3085/1996–ல்

கைரேகைகள் உள்ள அசல் பதிவேட்டினை ஒப்பீடு செய்ய இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கோரி 6ம் பிரதிவாதிக்கு உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அமைந்துள்ளது.

**3) <u>3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையை 1, 2, 4 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>**

3.1.) மனு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும் என்றும், இந்த மனு நிலைக்காது என்றும், ஏற்கனவே 1ம் வாதி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 45-ன்படி கைரேகை ஒப்பீடு செய்ய கோரப்பட்ட மனு இடைமனு எண்.398/2011 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டதாகவும், அந்த மனுவில் எதிர்மனுதாரரை கிரைய ஆவணத்தை தாக்கல் செய்ய உத்தரவிட்டதாகவும், அதன் அடிப்படையில் அசல் கிரைய ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த ஆவணம் ஆர்.கே.ராமசாமியின் ஒப்புக்கொள்ளப்பட்ட கைரேகையுடன் ஒப்பீடு செய்ய நிபுணரின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டதாகவும், அந்த ஒப்பீடுக்காக ஆர்.கே.ராமசாமியின் கிரைய ஆவணத்தின் 1ம் பக்கத்தின் பின்பக்கத்தில் உள்ள கைரேகை எடுக்கப்பட்டுள்ளது என்றும், அந்த கைரேகை நிச்சயமாக சார்பதிவாளர் அலுவலகத்தில் வாங்கப்பட்டதாக இருக்கும் என்றும், அதன் அடிப்படையில் நிபுணர் ஆய்வு செய்து இரண்டும் ஒன்று என்று அறிக்கை கொடுத்துள்ளதாகவும், அதில் எந்த ஒரு மோசடியும் ஆள்மாறாட்டமும் கிரைய ஆவணத்தில்

நடக்கவில்லை என்பதை காண்பிக்கிறது என்றும், பின்னிட்டு மனுதாரர்கள் வேறு மனுவினை அவிநாசியின் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து கைரேகை பதிவேட்டை கோரி தாக்கல் செய்ததாகவும், அந்த இடைமனு எண்.1331/2018 என்றும், அந்த மனுவானது இரு தரப்பு விசாரணைக்கு பிறகு தகுதியின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3.2.) பின்னிட்டு வாதிகள் தரப்பில் வா.சா.1–ன் முதல் விசாரணை சாட்சியம் பிரமாண வாக்குமூலமாக கொடுக்கப்பட்டு வா.சா.1–ன் குறுக்கு விசாரணைக்காக தற்போது வழக்கு விசாரணை நிலுவையில் உள்ள நிலையில் நிபந்தனை உத்தரவுகள் பிறப்பித்தும், வா.சா.1 நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும், தற்போது 3 வது முறையாக 5 ம் வாதியால் மேலும் அதே காரணத்திற்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த மனுவில் முந்தைய இடைமனு எண்.398/2011, 1331/2018 ஆகியவற்றை பற்றியும் அதன் முடிவையும் குறிப்பிட்டு கூறவில்லை என்றும், அந்த மனுவும் கடந்த 14.09.2022 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் அதனை தொடர்ந்து வா.சா.1 வேண்டுமென்றே நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணைக்கு ஆஜராககாமல் இருந்து வருவதாகவும், பின்னிட்டு மனுதாரர் வழக்கறிஞரை வேண்டுமென்றே மாற்றி அதனை தொடர்ந்து இந்த மனு தாக்கல் செய்திருப்பதாகவும், முந்தைய மனுக்கள் அனைத்தும் இந்நீதிமன்றத்தால் இரு தரப்பு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி

செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3.3.) இந்த மனுவில் கூறியுள்ள காரணங்கள் அடிப்படை அற்றது என்றும் ஒரே காரணத்திற்காக 4வது முறையாக இந்த மனு எந்த உரிமையும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஒரே பாரிகாரத்திற்காக இதே நீதிமன்றத்தில் தொடரும் மனுக்கள் நிலைக்கதக்கது அல்ல என்றும், மனுதாரர்கள் மேலமை நீதிமன்றங்களில் சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டுமே தவிர இதே நீதிமன்றத்தில் ஒரு பரிகாரத்தை வலியுறுத்தி மனுக்கள் தாக்கல் செய்யமுடியாது என்றும், சூழ்நிலை மாற்றங்கள் எதுவும் இந்த மனுவிற்கு காரணமாக அமையவில்லை என்றும், கூடுதலாக வா.சா.1 கடந்த 31.05.2006 தேதியிட்ட உயில் ஆவணத்தை கொண்டு மனு தாக்கல் செய்திருந்ததாகவும், அந்த உயில் ஆவணமானது இந்த எதிர்மனுதாரர்களால் கடுமையாக மறுக்கப்படுகிறது என்றும், உயில் ஆவணம் எழுதிவைக்க எந்த உரிமையும் இல்லை என்றும், அந்த ஆவணம் மோசடியாக பின்னிட்டு உருவாக்கப்பட்டவை என்றும், வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், முன்தீர்ப்பு தடை கோட்பாட்டினால் இந்த மனு பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மனு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளது.

4) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. இரு தரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. வழக்கு கோப்புகளை

கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**5) <u>இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்:–</u>**

5.1.) இம்மனுவின் தரப்பினர்களை அசல் வழக்கில் குறிப்பிட்டுள்ள வரிசைக்கு இணங்க மனுதாரர்களை வாதிகள் என்றும், எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகள் என்றும் குறித்து உரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.2.) அசல் வழக்கு கோப்பினை கவனமாக பரிசீலிக்கையில் ஏற்கனவே வாதிகள் தடய அறிவியல் நிபுணர்களின் ஒப்பீடுக்காக தாக்கல் செய்யப்பட்ட இடைமனு எண்.398/2011 ஆக அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் நிபுணரின் அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதற்கு பின்னிட்டு வாதிகள் தாக்கல் செய்த தடய அறிவியல் நிபுனரின் ஆய்வுக்கான மனு எண்.1331/2018 ஆனது இரு தரப்பு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதற்கு பின்னிட்டு வாதிகள் தொடர்ந்த அதே பரிகாரத்தை ஒத்த இடைமனு எண்.3/2022 ஆனது கடந்த 14.09.2022–ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதற்கு பின்னிட்டு இந்த மனு 4 வது முறையாக ஒத்த தன்மையுடைய பரிகாரத்தை கொண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே தள்ளுபடி செய்யப்பட்ட இடைமனுக்களின் உத்தரவுகளின் மீது வாதிகள் தரப்பில் மேலமை நீதிமன்றங்களில் சீராய்வு மனு

எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்கண்ட மனுக்களின் முடிவுகளை பற்றி வாதிகள் இந்த மனுவில் குறிப்பிடாமல் மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே இடைமனு எண்.398/2011–ல் நிபுனரின் ஆய்வறிக்கை பெறப்பட்டுள்ள நிலையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பது தேவையற்றதாக அமைந்துள்ளது. இந்த அசல் வழக்கானது கடந்த 03.06.2009–ல் திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.154/2009 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு கடந்த 19.04.2018 தேதியில் மாற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.89/2018 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது.

5.3.) இந்த அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் 5ம் வாதி கடந்த 30.01.2019ம் தேதியில் பிரமாண வாக்குமூலமாக வா.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு தற்போது வா.சா.1–ன் குறுக்கு விசாரணைக்காக 06.02.2019 தேதி முதல் நிலுவையில் இருந்து வருகிறது. வா.சா.1 கடந்த 13.02.2019, 19.02.2019, 25.02.2019, 01.04.2019, 15.04.2019, 29.04.2019, 04.07.2019, 05.09.2019, 17.10.2019, 14.11.2019, 05.12.2019, 06.01.2020, 28.01.2020 ஆகிய தேதிகளில் குறுக்கு விசாரணைக்கு ஆஜராகவில்லை. அதற்கு பின்னிட்டு கோவிட்–19 காரணமாக சில வழக்கு விசாரணைகளுக்கு வா.சா.1 ஆஜராகவில்லை. அதற்கு பின்னிட்டு இந்த

மனுவானது கடந்த 04.01.2023 தேதியில் புதிய வழக்கறிஞரை கொண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இடைமனு எண்.1331/2018–ல் கோரப்பட்டுள்ள பரிகாரமும் இந்த மனுவில் வாதிகள் கோரப்பட்டுள்ள பரிகாரமும் ஒத்த பரிகாரங்களாக அமைந்துள்ளது. ஆனால் காரணம் மட்டும் வேறுப்பட்டுள்ளது.

5.4.) ஏற்கனவே இடைமனு எண்.1331/2018–ஆனது இரு தரப்பு விசாரணைக்கு பிறகு கடந்த 05.10.2018–ல் தகுதியின் அடிப்படையில் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட தள்ளுபடி உத்தரவுக்கு எதிராக வாதிகள் மேலமை நீதிமன்றங்களில் சீராய்வு மனு தாக்கல் செய்யாமல் இதே நீதிமன்றத்தில் அதே பரிகாரத்தை கொண்டு இந்த மனு தாக்கல் செய்திருப்பது நிலைக்கதக்கதல்ல. மேலும் இந்த மனுவின் பரிகாரமானது ஏற்கனவே இடைமனு எண்.1331/2018–ல் தீர்வு காணப்பட்டுள்ளதாலும் தகுதியின் அடிப்படையில் தீர்வு காணப்பட்டுள்ளதாலும் இந்த மனு முன்தீர்ப்பு தடை கோட்பாட்டினால் பாதிக்கப்பட்டதாகும். மேற்கண்ட சூழ்நிலையில் வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை நீதியின் நலன் கருதி அனுமதிக்க உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால்

நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 16.09.2023 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.09.16 20:04:52 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**பிற்சேர்க்கை :–** இல்லை

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.09.16 20:04:57 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

இ.நி.ம.எண்.8/2023
இன்
அ.வ.எண்.89/2018
வரைவு/சீரான உத்தரவு
நாள்.16.09.2023
மா.உ.நீ., அவிநாசி